REGD No. M. 4642

திராவிடநாடு

இலங்கை 15 சதம் விலை அணா 2

மலர் 9 | 29—4—51 | இதழ் 45

★ ஓரே நிலவு! ★

கணநேர ஒலி! கை தட்டல்!
கேலிச் சிரிப்பு, கிண்டல், கண்டனம்
மந்தைகள் ஊளை, மடையர்தம் தீர்ப்பு
மனதை வளைக்கா 'மன்னன்' அவன்.

இதயங்கள் குவிக்கும் எழுச்சி வாழ்த்து
இறக்காத புகழ், எட்டாத செல்வாக்கு
மக்களின் மறையாத அன்பு,
இதுவே, அவனுக்கு, மணிமுடி!

கவிதைக்குக் காசு, நினைப்புக்குப் பரிசு
வெற்றிக்கு விருது, புகழ்ப் படையல்
'கூலிக்குப் பாட்டு—ஆகட்டும் தா!' என்ற
அரசின் ஆணை; அவனுக்கோர் தூசு!

எண்ணம் துடிக்கும்—அவன் இதயம், பாடும்!
கனவுகள் வெடிக்கும் கவிதைகள் மலரும்.
கண்ணீர் வடிக்கும் சொல்நீர் சுரக்கும்,
துந்துபி கிளம்பும்! துயரங்கள் நீங்கும்!
தொல்லை! ஏழ்மை! இல்லாமை!
எல்லாம் ஒழிய, எழுப்புவான் கீதம்.

—புஷ்கின்.

* * *

கவிஞன் ஓர் காலக் கண்ணாடி—
பழைமைச் சாயலின் பிரதி பலிப்பல்ல!

உள்ளத்தில் ஆவேசம், உணர்ச்சியில் 'புயல்'
எழுப்பிடும் அவனது இதய கீதம்!
எதுகை, மோனை, எழில்தரும் உவமை,
வசீகர வர்ணனை—பழைமைக்கு மெருகு
இத்தனையும் தேடி, எங்கெங்கோ ஓடி
'வார்த்தை முடையும்' வலைஞன், அல்ல!

—வால்ட், விட்மன்.

* * *

உயர்ந்த உள்ளங்களின் உன்னத நேரங்கள்!
வடித்துக் காட்டும் வரலாற்றுத் துளிகள்
அவையே கவிதை. அதுவே வாழ்வின்நூல்!

—ஷெல்லி.

* *

உன்னத எண்ணம், உயர்ந்த உணர்ச்சி
எழுப்பிக் காட்டும் இனிய சங்கீதம்.
அதுவே கவிதை.

—வால்டேர்.

* * *

ரஷ்ய நாட்டு புஷ்கினும், பிரஞ்சு நாட்டு வால்டேரும், ஆங்கில நாட்டு ஷெல்லியும், அமெரிக்க நாட்டு விட்மனும் 'கவிஞன் யார்? கவிதையின் இலட்சணம் எது' என்பது பற்றி உரைத்திருக்கும் விளக்கம் தான் தலைப்பிலே தீட்டப்பட்டுள்ளவை. இவர்கள் கூறுவது தானா முடிவாக அமைய முடியும் என்று யாருக்கும் கேட்கத் தோன்றும். ஆனால், இவர்களைவிட இது பற்றிக்கூற யாருக்கும் உரிமை இருக்கிறது என்று கூறிவிட முடியாது. காரணம் அந்தந்த நாட்டு இலக்கிய வரலாற்றிலே இவர்களே ஒப்பற்ற கவிஞர்கள் என்ற உன்னத இடத்தை உலகம் ஒப்புக்கொண்டு நெடுநாளாகிவிட்டது. ஆனால், இவர்கள் அத்தனைபேரும் ஒரு புதிய சகாப்தத்தின் தூதுவர்கள். அந்த மொழியிலே மறுமலர்ச்சி விதையைத் தூவிய உழவர்கள். இவர்கள் உதயமாவதற்கு முன்பெல்லாம் கவிஞன் என்றால்

ஆண்டவன் அருள் பெற்றவன், ஆலயத்தின் பெருமை குறித்து, அற்புதங்களின் மகிமை குறித்து பாட வேண்டியவன். அரசர்கள் ஆற்றல் குறித்து, அவர்களின் அழகு ராணிகளின் அலங்கார வேலைகள் குறித்து பாக்கள் புனைபவன் என்ற நிலைமைதான் இருந்து வந்தது. நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையிலே நேற்று வரையில் கவிகள் என்றால் கடவுள் கடாட்சம் வேண்டும் கான சரஸ்வதியின் கிருபை வேண்டும் என்று தான் கருதப்பட்டு வந்தது. கவிஞர்கள் என்போரும் அரி அவதார மகிமை பற்றியும், அந்த லோக வாழ்வின் அருமை பற்றியும், இகத்தின் இழிவு பற்றியும், இறைவனைப் பஜிக்க வேண்டிய இன்றியமையாமை குறித்துமே சொல்லோவியம் புனைந்து வந்தனர், காவியம் என்றால் ஒன்று மகேஸ்வரனைப் பற்றியதாய் இருக்கும். அல்லது மாளிகை வாசிகள் மனோஹரிகளுடன் கொஞ்சி விளையாடும் மந்தகாச வாழ்வைப் பற்றியதாய் இருக்கும். இதைத் தவிர மக்களைப் பற்றியவை எதுவுமே எழுந்ததில்லை. ஆனால் அந்த துர்பாக்கிய நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. நம்முடைய தலைமுறையிலே தமிழகம் ஒப்பற்ற ஒரு கவிஞனை உருவாக்கி யிருக்கிறது. தமிழ் மொழியிலே இப்படிப்பட்ட ஈடு இணையற்ற கவிஞரைக் கண்டதில்லை என்று நாடு இன்று இறுமாப்பு அடைகிறது. அவரது கவிதையிலே தமிழ் கொஞ்சி விளையாடுகிறது. அங்கே தென்றல் இருக்கிறது. புயல் இருக்கிறது. நெருப்பு இருக்கிறது. குளுமையான நிழல் இருக்கிறது. புன்னகை, கண்ணீர், பெருமூச்சு, அழுகுரல், புலம்பல், வீரமொழி மழலை அத்தனையும் பின்னிக் கிடக்கின்றன. தமிழ் மக்களின் உள்ளத்தின் உன்னதப் படப்பிடிப்பு அங்கே தெரிகிறது. அவர்கள் மனத்திலே என்னென்ன போராட்டங்கள் சிமிக்கொண்டிருக்கின்றனவோ அவைகளை கவிதையிலே பிழிந்தெடுக்கப் பட்டிருப்பதைக் காண்கிறார்கள். அவர்களின் வீழ்ச்சியுற்ற வாழ்விற்கு விசையளிக்க வந்த விருந்து என எண்ணுகிறார்கள்.

அந்தக் கவிதைகளிலே பழமைக்குப் பல்லவியில்லை. பழம் புலவர்களின் பாட்டுக்கு தாளமாகவில்லை. இலக்கணப் புத்தகத்திற்கு அடகு வைக்கப் பட்டதாகவுமில்லை. இன எழுச்சிக்கு ஊக்கம் ஊட்டுவதாய், இதய கீதத்தை இலக்கிய வட்டிலிலே வடித்து வைத்திருப்பதாய் மனதார உணருகின்றனர். அவரது கவிதை நாட்டின் கேட்டினையும், கெடு களையப்பட வேண்டிய அவசியத்தையும் எடுத்து உரைக்கிறது. எதிர்காலத்தில் உருவாக வேண்டிய சமுதாயத்திற்கு முன்னறிவிப்பு விடுக்கிறது. மக்கள் வாழ்விலே புதியதோர் நம்பிக்கை ஒளி பிறக்கிறது. தூங்கிக் கிடந்த அவர்கள் வாழ்விலே புதியதோர் எழுச்சி தென்படுகிறது. அந்த நிலைக்குக் காரணமான கவிஞனை, கவிஞன் வாழ்க! என்று தமிழகம் வாழ்த்துகிறது. வரவேற்புக் கூறுகிறது அந்தப் பெருமையை தட்டிப் பறித்தவர்தான் கவிஞர் பாரதிதாசன்.

கவிஞர் பாரதிதாசனின் பெருமையை உணர அவர் வாழும் தமிழகத்தின் படப்பிடிப்பு மிக மிகத் தேவை. சூழ்நிலைதான் கவிஞனை உருவாக்குகிறது. சூழ்நிலைக்கு அடிமையாகி விட்டாரா, சூழ்நிலையிலிருந்து எதிர்காலத்திற்கு பாதையைக் காட்டினரா என்பதுதான் கேள்வி.

அவர் வாழும் தமிழகம் இதோ! தமிழுக்கு இங்கு ஏற்றம் கிடையாது. இழிநிலையிலே இருக்கவேண்டிய ஒன்று. வேண்டாத சாதி நெருப்பு, விடியாத விதவைத் தொல்லை, கொடிய குழந்தை மணம், காதல் கொழிக்காத திருமணம், கஞ்சிக்கில்லாத ஏழை எளியவர், கல்நெஞ்சக் கடவுள் தரகர், பாட்டாளியை வாட்டும் பணக்காரன், இவை அத்தனையும் வேண்டியமட்டும் இருக்கிறது. இந்தக் காட்சிகள் கவிஞரின் மனதைக் குலுக்குகிறது. என்னருமைத் தமிழ் நாடே! இழிநிலையுற்றனையே யென்று ஏங்குகிறது அவர் இதயம்.

தமிழ் மொழியின் இனிமையை நினைத்துச் சொல்கிறார். அதுபடும் இடர்ப்பாடும் அவருக்குத் தெரிகிறது. வஞ்சகர்களால் வந்த வடமொழி அதன்மீது வம்புபுரிகிறது. ஆங்கிலத்தின் அட்டகாசம் தமிழின் ஒளியை அணைக்க முயலுகிறது. எங்கிருந்தோ வந்த இந்தி அரசபீடமேற துடித்து நிற்கிறது. எத்தனை கணைகளைத்தான் தமிழன்னை தாங்கிக் கொள்வாள்? எனவேதான் இந்திக்கு ஏற்றத்தையும் தமிழ் சரிகிற தன்மையையும் வைத்துக்கொண்டு கேட்கிறார்.

'மணக்கவரும் தென்றலிலே
குளிரா இல்லை
தோப்பில் நிழலா இல்லை
தணிப்பரிதாகத் துன்பமிது
தமிழகத்தின் தமிழத்
தெருவில்
தமிழ்தானில்லை.'

இவை வெறும் சொற்பின்னலல்ல, நாட்டின் நிலையைக் கூறும் உணர்ச்சிச் சித்திரம். தென்றலிலே குளிர் இல்லாமல் இருக்கமுடியாது. தோப்பிலே நிழல் இல்லாமல் இருக்கமுடியாது. ஆனால் தமிழ் நாட்டில் தமிழ்த் தெருக்களில் தமிழ்பெயர்கள் இல்லை. எவ்வளவு விசித்திரமான வேதனை! எனவேதான் "செந்தமிழுக்குத் தீமை வந்த பின்னும் இந்தத் தேகம் இருந்தொரு இலாபமுண்டோ? எப்பக்கம் வந்து புகுந்துவிடும்! இந்தி எத்தனை பட்டாளம் கூட்டிவரும், பங்கம் விளைந்திடில் தாய்மொழிக்கே உடல் பச்சைரத்தம் பரிமாறிடுவோம். தீங்குள்ள இந்தியை நாம் எதிர்ப்போம் உயிர் தித்திப்பை எண்ணிடப் போவதில்லை மாந்தயில் கூவிடும் பூஞ்சோலை எம்மை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை!" என்று எரிமலையின் அனற்பிழம்பு போன்று கூற முடிகிறது. தமிழின் சிறப்பு பற்றி, தமிழைக் காப்பாற்ற வேண்டிய கடமை குறித்து வேறு எந்தக் கவிஞனும் இவ்வளவு பாடல்கள் தீட்டியதில்லை. தீட்டவும் முடியாது. அவ்வளவு தெகட்டாத அன்பு தமிழின்மேல் அவருக்கு.

சமதர்ம சகாப்தத்தின் தலைசிறந்த கவிஞன் என்று புகழப்பட்ட மாயகாவ்ஸ்கி சொன்னான். "வாழ்நாள் முழுதும் நான் பாடுபட்டது அழகிய பாடல்களை ஆக்கி, கேட்பவர் காதுகளில் செஞ்சொற் தேனைச் சொரிந்து நெஞ்சை யள்ளுவதற்காக அல்ல. சிலரை, சில ஏற்பாடுகளை தலைதுப்புறக் கவிழ்ப்பதே எனது போராட்டம் எனது இருபதுவருட இயக்கப் பணியிலே உண்மையாக நான் சண்டையே நடத்திவந்திருக்கிறேன்" என்ற மாயகாவ்ஸ்கியின் மணிமொழிகள் பாரதிதாச

ளைப்பொறுத்தவரையிலே மிக மிக உண்மை. இவரது இலக்கிய சேவை குத்துச்சண்டையாக இருந்திருக்கிறது. ஆரம்பக் காலங்களிலே புலவர் பெருமக்கள் என்பவர்கள் இவரை கவிஞர் பட்டியிலிலே சேர்த்துக்கொள்ளவில்லை. ஏளனமும் கேலியும் கிண்டலும் பரிசாகக் கிடைத்தன. வங்கத்தின் தங்கம் என்று போற்றப்படும் கவிதாகூர் பாடல்கள் புனைந்தபோது வங்க மொழிப்பண்டிதர்கள், தங்கள்மாணவர்களுக்கு அவைகளை எடுத்துக் கொடுத்து இலக்கணப் பிழைகளை திருத்தச் சொல்வார்கள்! அது போன்றதொருநிலையே இங்கும் நீடித்தது. அவர் கவிதைகளிலே செஞ்சொல் தேன் இருந்தது. ஆனால் நெஞ்சை யள்ளுவதுதான் அவைகளின் நோக்கம் என்று நினைக்கவில்லை. சிலரை, சிலஏற்பாடுகளை தலைகுப்புறக் கவிழ்ப்பதுதான் அவரது போராட்டம் எனக்கருதினார். எனவேதான் விதவைக்கொடுமையைக் கண்டபோது "வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள் மணவாளன் இறந்தால் பின் மணத்தல் தீதோ, பாடாத தேனீக்கள், உலவாததென்றல், பசியாத நல்வயிறு பார்த்ததுண்டோ" என்று கேட்டார். காதல் மணத்தை கடிந்தோரை "காதலறிவுறும் தம் கருத்தொருமித்தபின் வாதுகள், வம்புகள் ஏன்? இதில் மற்றவர்க்கென்ன உண்டு—சூது நிறையுலகே—கபட இருட்டறையே என்று கோப மொழிகளை வீசினார். குழந்தை மணத்தின் கொடுமை குறித்து "அவள்தான் கூவத்தெரியாத குயிலின் குஞ்சு, தாவாச்சிறுமான் மோவா அரும்பு தாலியறுத்துத் தந்தையின் வீட்டில் இந்தச்சிறுமி இருந்திருக்கிறாள்" என்று பச்சாதாபத்துடன் வரைந்தார். ஜாதிக் கொடுமை குறித்து "வாழ்கின்றார். முப்பத்துமுக்கோடி மக்களெனில் சூழ்கின்றபேதமும் அந்தத்தொகை இருக்கும். இந்த உளைச்சேற்றை, ஏறாத ஆழத்தை நீக்குவது எப்படி என்று வினவுகிறார். இந்த கவிதைகள் சமுதாயச் சழக்கர்களுக்கு சவுக்கடிமட்டுமல்ல. அந்தக் கொடுமைகள் தூர்க்கப்படவேண்டும் என்பதற்கோர் கருவியாயிற்று. இந்த சமுதாய ஏற்பாடுகளை தலைகுப்புறக் கவிழ்ப்பதற்கு அவை பெருந்தொண்டு செய்தன என்று சொல்லலாம்.

இக்பால் இஸ்லாமிய கலாச்சாரத்தின் பாதுகாவலர் என்றால் பாரதிதாசன் திராவிட கலாச்சாரத்தின் பாதுகாவலர் என்று சொல்லலாம்; கவி தாகூரின் இயற்கை வருணனைகளை மிஞ்சியவை கவிஞரின் 'அழகின் சிரிப்பு' என்று அவனி ஓர் நாள் ஒத்துக்கொள்ளத்தான் போகிறது. ஷெல்லி ஆதிக்க புரியினர் மீது தனது கவிதா சக்தியை ஏவினார். இதிலே அவரையும் மிஞ்சிவிட்டவர் பாரதிதாசன் என்றுதான் அவரது கவிதைகள் கூறுகின்றன. வால்ட் விட்மன் பழைமைபாசி படர்ந்த கொள்கைகளை அகற்றி புது சமுதாயம் உருவாக மெருகிட்டார். நமது கவிஞரின் பாடல்கள் பழைமைக்கு படுகுழி வெட்டி, புது வாழ்வுக்கு வரவேற்பளிக்கும் துந்துபியாய் முழங்குகின்றன. ஏழை எளியவர்கள் உழைக்கிறார்கள். அவர்களின் உழைப்பை உறிஞ்சி உல்லாச புரியினர் உண்டு கொழுக்கின்றனர் என்பதைக் கூற வந்த ஷெல்லி பின்வருமாறு கூறினார். மக்களே உங்களைத் தாழ்மைப்படுத்தும் தனவந்தருக்கு நீங்கள் உழுது பயிரிடுவதேன். உங்களை உதாசீனப்படுத்துபவனுக்கு உயர்ந்த உடைகளைக் கொடுப்பதேன்? உங்கள் வியர்வை வடித்து, உங்கள் குருதியைக் குடித்து உங்களைத் துன்புறுத்தும் அந்த நன்றியற்ற தேனீக்களுக்கு பிறப்பு முதல் இறப்பு வரை உணவும் உடையும் தந்து காப்பதேன்' உங்களுக்கு நல்லுணவு, உடை, ஓய்வு—ஒதுங்க இடம், சுகம், சமாதானம் உண்டா! நீங்கள் விதைக்கிறீர்கள்—அயலான் அறுக்கிறான், நீங்கள் நெய்கிறீர்கள், அயலான் அணிகிறான். நீங்கள் ஆயுதம் செய்கிறீர்கள், அயலான் உங்கள் மீதே உபயோகிக்கிறான்" இதே கருத்தைக் கூறவந்த கவிஞர் இக்பால் தொழிலாளியின் இரத்தத்தால் முதலாளி போகமனுபவிக்கிறான். உழவரின் வாழ்நாளைப் பாழாக்கி மிராசுதாரன் இன்பமாக இருக்கின்றான். உழைப்பவனை நுகத்தடியில்மாட்டி அரசன் ஆனந்தமடைகின்றான். அட்டூழியத்தில் சிக்கிய மக்களோ உணர்கின்றனர். பலவீனர்கள் தேகத்திலும் சில சமயம் சிம்மத்தின் இரத்தம் ஓடும்நீர்த்துளியிலும் நெருப்பின் உணர்ச்சி தோன்றுவதுண்டு" என்று கூறினார். இதைக் கூறவந்த பாரதிதாசன்

காடு களைந்தோம்—நல்ல
கழனி திருத்தியும் உழவு புரிந்தும்
நாடுகள் செய்தோம்—அங்கு
நாற்றிசை வீதிகள் தோற்றமும் செய்தோம்.
ஆடைகள் நெய்தோம்—பெரும்
ஆற்றை வளைத்து நெல் நாற்றுகள் நட்டோம்
வாழ்வுக்கொவ்வாத—இந்த
வையத்தை இந்நிலை எய்தப் புரிந்தோம்
கந்தை யணிந்தோம்—இரு
கையை விரித்தெங்கள்
மெய்யினைப் போர்த்தோம்.
மொந்தையிற் கூழைப்—பலர்
மொய்த்துக் குடித்து பசித்துக் கிடந்தோம்
சந்தையில் மாடாய்—யாம்
சந்ததம் தங்கிட வீடுமில்லாமல்
சிந்தை மெலிந்தோம்—எங்கள்
சேவைக் கெலாம் இது செய் நன்றிதானோ.

என்று கேட்கிறார். மேலே குறிப்பிட்டுள்ள மூன்று பகுதிகளை ஒப்பிட்டுப் பார்த்தால் பாரதிதாசனின் பாடல்களின் கருத்துச் செறிவுக்கும் பொருள் நுட்பத்திற்கும் அத்தாட்சியாய் அமையும்.

பழைய இலக்கியம் என்பவை வைதிகத்திற்கு வாழ்த்துக் கூறி வரட்டு வேதாந்தத்தை புகுத்துவதாகவே முடிந்தது. தமிழர்களின் உள்ளத்திலே விஷவிருட்சம் இருப்பதற்கு காரணம் இதுதான். கவிதைகள் வாழ்க்கைக்கு தொழுகை அமையவில்லை. கவிஞரின் குடும்ப விளக்கும் "இருண்ட வீடும்" வாழ்க்கைக்கு இலக்கணம் உரைப்பவை. புது வாழ்வு அரும்புவதற்கு உபயோகமாகும் கருவூலப் பெட்டகங்கள் கவிஞரின் இலக்கியங்கள் பிரச்சார நோக்கங் கொண்டவை என்று குறைகூறும் கூட்டம் ஒன்று இருக்கிறது. இது இங்கு மட்டும் தான் என்று இல்லை. எல்லா நாடுகளிலுமே இப்படிப்பட்டவர்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

"வரி கொடேன்!"

"ஓர் இரவு" நாடகத்திலே, உழவன் வேடம் தாங்கிவரும் தோழர் பாடும் பாடல் ஒன்று உண்டு—'தன்னானே' மெட்டில். "எல்லாரும் நல்லா இருக்கோணும்னுத்தான், ஏரைப் பிடிச்சுழுறோம் நாங்களே!" என்று துவங்கும், உடுமலை நாராயணக்கவிராயரின் அப்பாடல்,

"கூப்பனுங்கிறான்—கீப்பனுங்கிறான்
குழந்தை குட்டியைக் கணக்கெடுக்கிறான்
பேத்தவருட்டமா!"

என்று முடியும். நாட்டுப்புறத்துவிவசாயியின் வார்த்தைகளில் கிடைக்கும் வேதனை ஒலியை விளக்குவதாகும் அப்பாடல். அப்போது கொட்டகையே, அதிரும்,மக்களின் கரகோஷத்தால்! கைதட்டலோடன்றி, அதன் கருத்து ஆழம் பற்றியும், பிறகு சிந்திப்பர் கேட்போர். வெகு சாதாரண வரிகள் தான், எனினும் ஏழைக்குச் சிறந்து வேலையைத்தான் தரும், அவை.

அதைப்போலவே பர்மிய சித்திரக்காரர் ஒருவர் எல்லோருடைய சிந்தனைக்கும் ஒரு வேலையைத்தந்திருக்கிறார்—ஒரு கேள்விமூலம்.

அவருடைய பெயர் பா—கியான் என்பதாகும். பர்மாவில் வெளியாகும் செய்தித்தாட்களிலும், கிழமை இதழ்களிலும் 'கார்டூன்கள்'வரைந்து பணமும் புகழும் பெற்றுவரும் பிரபல ஓவியர், அவர். பர்மிய சர்க்காரைப் பார்த்து கேள்வியொன்று கேட்டிருக்கிறார். "சாதாரணமான கேள்விபோலிருக்கிறதே!" என்றுகூட நினைக்கத்தோன்றும். விஷயம் புரியாதவரோ, கிராமத்து உழவர் 'ரேஷனைப்'பற்றி பாடியதுபோல—என்றுகூட சொல்லத் தூண்டும்.

ஆனால், அந்தக் கேள்வி சிந்தனைக்கு வேலைமட்டும் தராமற் போகாது!

பர்மிய சர்க்கார், அவரது வருமான விபரம் கோரினராம். பிறகு வருமானவரி கட்டவேண்டுமென்று கட்டளையிட்டனராம். அந்த உத்திரவைக்கண்ட பின்னரே, அவர் சர்க்காரைப் பார்த்துக் கேட்டிருக்கிறார்.

"வரி கேட்க வந்துவிட்டீர்களோ வரி! ஏதோ, கஷ்டப்பட்டு நாலு காசு சம்பாதிக்கிறேன் என்றதும் வந்துவிட்டீர்களாக்கும் 'வரி! வரி!!' என்று. 'வரி எங்கே?' என்று அதட்டத் தெரிகிறதே, இன்று. அன்று நான் வீதியிலே திரிந்தேனே, வேலை கிடைக்குமோ வேலை, என்று கூவி! அப்போது உங்கள் செவிட்டுக் காதுகளில் என் குரல் கேட்காமலா போய்விட்டது. எத்தனை நாட்கள் அலைந்தேன், திரிந்தேன்—ஒரு வேலை பெற. யாராவது முன் வந்தீர்களா? சர்க்கார், என்று பெருமையோடு சொல்லிக்கொண்டு 'வரி கொடு' என்று வரமட்டும் தெரிகிறது—நான் சம்பாதித்து வாழ்வதைக் கண்டதும். வரி வாங்குவதில் இருக்குமளவு சிரத்தை, வறுமையால் வாடுவோருக்கு வாழ்வு அளிப்பதிலுமல்லவோ இருக்கவேண்டும். இருந்ததா? எத்தனை தடவைகள் நான் பட்டினியால் பதறினேன். எவ்வளவு ஆண்டுகள், எங்கெங்கோ அலைந்து, அல்லலுற்றேன். அப்போதெல்லாம் 'ஏனப்பா' என்று கேட்காத சர்க்காருக்கு இப்போது மட்டும் 'வரி கொடு' என்றுரைக்க என்ன யோக்கியதை இருக்கிறது? சித்திரம் தீட்டினேன் — தெருத் தெருவாய்க் கொண்டுபோய்க் கூவினேன். சர்க்கார் காரியாலயங்கள், அதிகாரிகள் வீடுகள் எல்லாம் என்னைத் துரத்தினவேயன்றி, துயரால் வாடுகிறான் இவன், சிறிது உதவுவோம் என்று யார் வந்தார்கள்? நான் உழைத்தேன்—பேர் பெற்றேன்— சம்பாதிக்கிறேன். இப்போதுமட்டும் 'வரிகொடு' என்று வந்தால்! முடியாது. என்னைப் புறக்கணித்த இந்த சர்க்காருக்கு நான் வரி கட்டமுடியாது. இந்த சர்க்காரால் எனக்கு எந்தவித உதவியும் கிடைக்கவில்லை. பின், ஏன், நான் மட்டும் வரி கொடுத்து உதவவேண்டும்?"

இந்தவிதமாக அவர், பர்மிய, சர்க்காரைப் பார்த்து கேட்டிருக்கிறார். அதோடு மட்டுமல்ல, "நான் சித்திரம் தீட்டுவதால்தான் எனக்குப் பணம் கிடைக்கிறது, எனக்கு வருமானம் வரவேதான் சர்க்கார் 'வருமான வரி எங்கே?' என்று வருகிறது. ஆகவே, "நான் சித்திரம் தீட்ட வேண்டாம் – சம்பாதிக்கவும் வேண்டாம்—இந்தச்சர்க்காருக்குவரி கட்டவும் வேண்டாம்!" என்றும் அறிவித்திருக்கிறார்.

தான் இனிமேல் சித்திரங்கள் எழுதப் போவதில்லையென்றும், தான் சம்பந்தப்பட்ட பத்திரிகைகளுக்கும் தெரிவித்து விட்டாராம்.

எப்படி, ஓவியரின் கேள்வி?

"எனக்கு உதவாத சர்க்காருக்கு நான், ஏன் உதவவேண்டும்" பலர், இது போலக் கேட்கத்துவங்கினால் என்ன ஆகும்!

மூளை, சுழல்கிறதா! என்ன செய்வது. சமுதாயமும் சர்க்காரும் அப்படி இருக்கிறதே!!

★

3-ம் பக்கத் தொடர்ச்சி

இருந்திருக்கிறார்கள். ஆங்கிலநாடக இலக்கியத்திலே தலை சிறந்த காலஞ்சென்ற பேரறிஞர் பெர்னாட்ஷாவின் நாடகங்கள் பிரச்சார நோக்கங் கொண்டவை. அவை வெறும் சம்பாஷணைகள் (Conversations) சரித்திரப்பாடங்கள் (History Lessons) என்று குற்றஞ்சாட்டப்பட்டது. அதற்கு பெர்னாட்ஷா பதிலிறுத்தாராம். "நான் சமுதாயத்திற்கு சில கொள்கைகளைக்கூறவேண்டும். அந்த கொள்கைகளைச் சொல்ல எனக்கு நாடகம் வசதியாக இருக்கிறது. அதனால்தான் எழுதுகிறேன். என்னுடைய நோக்கம் பிரச்சாரம்தான் என்றாராம். ஆனால் பெர்னாட்ஷாவின் நாடகங்கள் உயரிய இலக்கியம் என்ற பெயரைத்தான் பெற்றன. எனவே பிரச்சாரம், பிரச்சாரம் என்பதெல்லாம் முயற்சியை உருக்குலையச்செய்யும் சூழ்ச்சி தவிர வேறில்லை.

ஏப். 29 இன்று, நமது கவிஞருடைய மணி விழா நாள். தமிழகத்தின் புரட்சிக் கவிஞர், தனது 60-ம் ஆண்டுப் பருவத்திலே காலடி எடுத்து வைக்கிறார். மகிழ்ச்சியும் பூரிப்பும் பொங்கி வழிகிறது, நமது இதயங்களில்! பாரதிதாசன் தமிழ் வானத்தின் ஒரே நிலவு. அவர், திராவிடத்தின் சொத்து. அவர் கவிதைகள், தேன் சொட்டும், சாவாக் கனி! 'அவர் வாழ்க! அவரது புகழ் உலகெங்கும் பரவுக!' என்று, தமிழகம், இன்று தனது இதய வாழ்த்துக்களைச் சேர்ப்பிக்கிறது. தமிழகத்தின் மகிழ்ச்சித் திருவிழா கண்டு மனம் பூரிக்கும் நாமும் நமது இதய வாழ்த்துக்களை அவருக்கு அர்ப்பணிக்கிறோம்.

வாழ்க! வாழ்க நம் கவிஞர்!!

★ எங்கோ ஓரிடத்தில்! ★

"போங்க, சார்! என்ன வேலை வேண்டிருக்கு வேலை. கொஞ்சங் கூட மதிப்பு மரியாதையே இல்லை. எல்லாம் வச்சது இஷ்டம்—போட்டது உத்திரவுன்னு இருக்கு. ஆபீசா, மண்ணாங் கட்டியா, கொஞ்சங் கூட மதிப்பு இல்லே!"

"ஏன், சார்? பெரிய உத்யோகம், அதுவும் கவுரவமான உத்யோகம். மேலும்......மராமத்து இலாக்காவிலேன்னு லேசா! இந்த உத்யோகம் கிடைக்குமான்னு எத்தனையோபேர் தவம் கிடக்குறாங்க...நீங்க வந்து..."

"இருக்கலாம் சார். எல்லோரும் அப்படித்தான் நினைப்பாங்க. ஆனால் என்ன செய்றதுங்க, நம்ப உடம்பிலே ஓடுவது தண்ணீரில்லே பாருங்க. ரத்தம்—அதிலும்கொஞ்சம் மானம் மரியாதையோடே ஓடுறரத்தம். ஆகவேதான் தாங்க முடியலே இங்கே நடக்கிற அக்ரமத்தைப் பார்க்க!"

"ஆபீசிலே அக்ரமமா! என்ன சார், புதிர் போடுறீங்க. நீங்க—பெரிய உத்யோகஸ்தர். யாராவது, வார்த்தைக்கு எதிர்வார்த்தை பேச முடியுமா? ஊம்னு ஒரு கிறுக்கு கிறுக்கினாப் போதும்! உத்யோகஸ்தர்கள் எல்லாம் நடுங்கணும்..."

"உத்யோகஸ்தர்கள் என்ன சார் பண்ணுவாங்க. நான் சொல்றது... உங்களை ஒண்ணு கேட்கிறேன் சார், பதவிபெரிசா—பணி பெரிசா?"

"சிலருக்குப் பதவிதான் பெரிசு. சிலருக்குப் பணிதான் பெரிசு!"

"நல்லா சொன்னீங்க! உங்களைப் போல பத்து பேர் இருந்தா, எப்படி உருப்படும், தேசம். நீங்க உத்யோகஸ்தர் இல்லே—நீங்க யாருக்கும் பயப்படவேண்டியதும் இல்லே—அப்படிப்பட்ட நீங்களே, என் கேள்விக்குப் பட்டதும்படாததுமா, பதில் சொன்னா, ஏன் வராது திமிரு?"

"யாருக்குங்க—என்னுங்க, சொல்றீங்க!"

"என்னத்தைச் சொல்றது? அது சரி. உங்களை நம்பி நான் பத்து ரூபா, பணம் தர்றேன்—பத்திரமா வைச்சுக்குங்கன்னு அல்ல—என் பையன் வந்து கேட்டா, அவனுக்குத் தேவையானது வாங்கிக் கொடுங்கோன்னு சொல்லி. நான் ஊருக்குப் போனதுக்கப்புறம், என் பையன் வர்றான். 'காபி, சாப்பிடணும். அப்பா பணம் கொடுத்தாராமே—ஒரு அரை ரூபா கொடுங்கோ' அப்படீன்னு கேட்கிறான். நீங்க என்ன செய்வீங்க..."

"உடனே, அரை ரூபாய் எடுத்துத் தருவேன்."

"அதுதானே 'செய்யணும்'—அப்பத்தானே நம்பிக்கையுள்ள நாணயஸ்தர்னு சொல்லலாம்."

"ஆமாம்..."

"பையன் கேட்கும்போது எதப்பா பணம் — உங்கப்பா கொடுத்தாரு. ஆனால், இப்ப இல்லே!'ன்னு சாக்கு போக்குச் சொல்லிவிட்டு, கொஞ்ச நேரத்துக்கெல்லாம் உங்க சொந்தப் பையனிடம் ஒரு ரூபாய் கொடுத்து ஓட்டலுக்குப்போகச்சொன்னா...!"

"சே! யாருங்க அப்படிச் செய்வான். அது ரொம்ப அல்பத்தனமல்லவோ — நாணயக் குறைவல்லவோ..."

"அதனாலே தான், நான் சொன்னேன். ஆபீஸிலே அக்கிரமம்னு! நீங்களே சொல்லுங்க, என் ஆபீசுக்குப் புதுசா வாய்க்கால் வெட்டணும்னு ஒரு பெட்டிஷன் வருது—ஒரு ஊரிலிருந்து. உண்மையாப் பார்த்தா, அந்த ஊருக்கு ஒரு வாய்க்கால் இருந்தா நிறைய விளையும். ஆனால் பணமோ, சர்க்காரிலே இல்லே! மந்திரிகிட்டே சொன்னாலும், சர்க்காரிலே, இப்ப, பணம் இல்லே'ன்னு சொல்றாரு. என்ன செய்வது?"

"அதுக்கு என்ன செய்யறது — கொஞ்சம் பொறுத்துக்குமாறு, பெட்டிஷன்தாரருக்குச் சொல்லணும்......?"

"அதுதானேமுறை...?"

"ஆமாம்!"

"இன்னொரு பெட்டிஷன், இரண்டு நாளுக்கெல்லாம் வருது—வேறொரு கிராமத்திலே இருந்து, பார்க்கப்போனா இந்த ஊருக்கு அவசியம்கூட இல்லே, புதுவாய்க்கால். நான் என்ன செய்யணும்"

"முடியாது—பிறகு ஆகட்டும்னு தான் சொல்லணும்."

"அப்படிச் சொன்னதும், உடனே சிபார்சு செய்கிறார் மந்திரி. அதெப்படி ஐயா, கூடாதுன்னு சொன்னேன். என் கிராமம்னா, அதுக்கு வாய்க்காலே கூடாதா. ஊம்......அப்படீன்னு என்னைப் பார்த்து முறைச்சா......"

"ஏன் அப்படி, இங்கே, நடக்குதுங்களா......"

"நடக்குதோ இல்லையோ-என்னை பார்த்து, முறைச்சா அதென்ன நியாயமுங்களா! நீங்களே சொல்லுங்க, மானம் மரியாதைஉள்ளவன் இதைச் சகிக்கமுடியுங்களா! எதோ பொதுப்பணம்—மக்கள் தர்ற வரிப் பணம், அதுலே நாம் வாழுறோம்; அப்படிங்கிற கவலையிருக்கிறவன் இருப்பாங்களா!"

"நீங்க சொல்றது சரிதான்"

"ஏன் தடுமாறீங்க! உங்களைப் போன்ற பொதுஜனங்கதான் இதையெல்லாம் கேட்கணும்......"

"கேட்கவேண்டியதுதான்........ ஆனால், நேற்றைக்கு எங்க ஊர்—அதான் வேலூர்—பொதுக்கூட்டத்திலே பேசறப்போ மந்திரி சொன்னாரே......"

"என்ன சொன்னாரு?"

"ஒரு சிலர் நிலைமையைத் தங்கள் சுயநலத்திற்காகப் பயன்படுத்தி சுரண்டிப்பிழைக்கப் பார்க்கின்றனர்—அப்படீன்னு காரசாரமாப் பேசினாரே!"

"பேசினாரா! கடைசியிலேஎன்ன சொன்னாருங்க......?"

"அவுங்க வலையிலே வீழ்ந்துடாதீங்க—உங்களைக் காப்பாத்தறகட்சி என்கட்சிதான். ஆகவே, எங்க கட்சிக்கே மறந்துடாமேஓட்டுபோடுங்க ......அப்படி இப்படின்னு பேசி முடிச்சாரு."

"ஓட்டு, தன்கட்சிக்கே போடணும்னார்!"

"ஓ! அதைத்தானே, சும்மா சும்மா சொல்லிக்கொண்டிருந்தாரு!"

"சொல்லியிருப்பாரு சொல்லியிருப்பாரு! அந்த வேலைதான் ஆரம்பமாயிடுச்சே......"

✻

திராவிட நாடு

ஞாயிறு] 29—4—51 [காஞ்சி

அங்கே, பார்!

★

பிரிட்டனில் பெரிய நெருக்கடி உண்டாகலாம், ஆட்சி மந்திரி சபைக்கு ஆபத்து நேரலாம் என்று அஞ்சுமளவுக்கு, கடந்த வாரம், குறிப்பிடத்தக்க சில நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன.

சுகாதார மந்திரியான பெவான் தனது பதவியை ராஜினாமாசெய்தது தும், அதைத் தொடர்ந்து வர்த்தக போர்டுத் தலைமைப் பதவி வகித்து வந்த மற்றொரு மந்திரி வில்சன் விலகியதும், அவர்களோடு சபை மந்திரிசபை பார்லிமெண்டரி காரிய தரிசியான ஜான்பிரீ-மேன் தன் பொறுப்பை ராஜினாமா செய்ததும், பிரிட்டனில் மட்டுமல்ல, எங்குமே ஒருபரபரப்பை உண்டு பண்ணியது.

இரு மந்திரிகளும் விலகியதன் விளைவாக, ஆட்சி மந்திரிசபையின் பலம் குறையலாம், அவர்களது தொழிற்கட்சியில் பிளவு ஏற்படலாம் என்றே எல்லோரும் எதிர் பார்த்தனர்.

ஏனெனில் பிரிட்டிஷ் பொதுச் சபையில் (House of Commons) தொழிற்கட்சிக்குள்ள மெஜாரிட்டி, மூன்றே மூன்றுதான். ஆகவே, மூவர், தத்தமது பொறுப்பிலிருந்து விலகினர்; அதுவும் கருத்து வேறுபாடு காரணமாக ராஜினாமா செய்தனர் என்று தெரிந்ததும், தொழிற் கட்சி மந்திரிசபை பதவியிலிருந்து விலகும்படி நேரலாமோ என்ற ஐயம் எங்கும் எழும்பிற்று.

அப்படி நேர்ந்துவிட்டால், புதுத் தேர்தல் ஒன்றும் நடைபெற நேரிடுமே என்றும் பிரிட்டன் பற்றி சிரத்தை கொண்டோர் கவலைப்பட்டனர்.

நல்லவேளையாக, விலகிய மூவரும், தொழிற்கட்சிக் கட்டுப் பாட்டை மீறி எதுவும் செய்யப் போவதில்லையென்று உறுதி தந்திருப்பதால், ஆட்சி மந்திரிசபைக்கு ஆபத்து இல்லை என்று தெரிய வருகிறது.

*　　*　　*

பிரிட்டனை ஆள்வது, தொழிற் கட்சி. ஆள்வோரின் திட்டம் சரியல்லவென்று கூறி, ஆட்சிப் பொறுப்பிலிருந்து விலகியோரும் தொழிற் கட்சியைச் சார்ந்தவர்கள். இன்னும் சொன்னால், முதலில் விலகிய பெவான் தொழிற்கட்சித் தலைவர்களில் குறிப்பிடக் கூடியவர். இருந்தும், அவர் மந்திரிசபையிலிருந்து விலகியிருக்கிறார்.

தான் விலகவேண்டி நேரிட்டது குறித்து அவர் காட்டியுள்ள காரணமும், விளக்கமும் உலக அமைதி விரும்புவோரும், குறிப்பாக 'நம்ம மந்திரிமாரும்' ஊன்றிக் கவனிக்க வேண்டியதாகும்.

ஆயுதத் தளவாடங்களை அதிகமாக உற்பத்தி செய்வதற்காக மூன்று ஆண்டுத் திட்டம் ஒன்று போட்டு அதற்கென 6,266-கோடி ரூபாய்கள் செலவு செய்வதென பிரிட்டிஷ் சர்க்கார் முடிவு செய்துள்ளார்கள்.

இந்த முடிவு, மக்களின் வாழ்க்கைச் சுகத்தைப் பாதிக்குமென் பதே பெவான் காட்டியிருக்கும் காரணமாகும்.

*　　*　　*

அமெரிக்கா, இன்னொரு போருக்குத் தன்னை ஆயத்தம் செய்து கொண்டு வருகிறது, ஏராளமான போர்த் தளவாடங்களைத் தயார் செய்வதன் மூலம். அதற்கான முறையில், தனக்குத் தேவையான செம்பு, ஈயம், கந்தகம் முதலான பொருள்களைச் சேமித்துக் கொண்டும் வருகிறது.

மேற்படி பொருள்கள், போர்த் தளவாட உற்பத்திக்கு மட்டுமின்றி, இயந்திர உற்பத்திக்கும் இன்றியமையாதனவாகும்.

பிரிட்டன், இயந்திர உற்பத்தியில் முக்கிய இடம் வகிக்கும் நாடு! பிரிட்டனின் உற்பத்திப் பொருள்கள் உலகெங்கும் ஏற்றுமதியாகின்றன. ஆனால், அந்த அளவு பிரிட்டன் வியாபாரத் துறையில் சிறந்து விளங்கினாலும், உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருள்கள் அங்கு கிடையாது. வெளியிலிருந்து பருத்தி கிடைத்தால்தான் ஆடை நெய்ய முடியும்!

எனவே, இயந்திர உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருள்கள் வெளிநாடுகளிலிருந்து வந்தால் தான், பிரிட்டனின் வாழ்வு, சங்கடமில்லாமல் நகரும்.

ஈயம், செம்பு, துத்தநாகம், மாங்கனீஸ், நிக்கல், பருத்தி, கம்பளி, கந்தகம் முதலான மூலப் பொருள்களை சர்வதேசத்துக்கும் கிடைக்கும்படிச் செய்யும் நோக்கம் கொண்ட சர்வதேச மூலப் பொருள்கள் சங்கத்தின் உறுப்பினர்களாக அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் முதலிய நாடுகள் அங்கம் வகித்தாலும், பிரிட்டனுக்குத் தேவையான அளவு மேற்குறித்த மூலப்பொருள்களை அனுப்புவதில் அமெரிக்கா சிரத்தை கொள்வதில்லை.

காரணம், மேற்படி மூலப் பொருள்களில் பல, போர்த் தளவாட உற்பத்திக்குத் தேவையாயிருப்பதுதான்.

"பிரிட்டனுக்குத் தேவை! அமெரிக்கா, அதைக் கவனிப்பதில்லை!" என்று, நீண்ட நாளாக, பிரிட்டிஷ் வட்டாரங்களில் அதிருப்தி நிலவி வருகிறது.

தனது வியாபார உற்பத்திக்கான மூலப் பொருள்கள் போதுமான அளவு கிடைக்காத நேரத்தில் ஆயுதப் பெருக்கத் திட்டத்தையும் வைத்துக் கொண்டால் தொல்லைகள் பெருகும்! பிரிட்டனின் உலக வியாபாரம் குறையும்! ஆலைகள் அவதிப்படும்! தொழிலாளர் துயர் உறுவர், —என்று, பெவான், விளக்கமாக எடுத்துரைத்திருக்கிறார்.

*　　*　　*

பெவான், விலகினார். சுகாதார மந்திரிப் பதவியை ராஜினாமா செய்தார்.

தன் கருத்துக்கு மாறுபாடான காரியம் ஒன்றைச் செய்கிறது மந்திரி சபை—என்று கண்டதும், பதவியைத் துச்சமென மதித்திருக்கின்றனர், விலகிய மூவரும்.

விலகியதற்கு காட்டியுள்ள விளக்கம் விவேகம் நிரம்பியோர் கவனத்தைக் கவரக் கூடியதாகும்.

"அதிக ஆயுத உற்பத்தித் திட்டத்

தால் நாட்டின் பொருளாதார நிலை சீர்கேடும். சமுதாயத்துக்கு நாம் செய்யவேண்டிய காரியங்களைச் செய்யத் தவறி விடுவோம்.''

என்பதாக, அறிவுறுத்தியிருக்கிறார்.

ஆயுத உற்பத்திக்கென, தேசிய இன்ஷ்யூரன்ஸ் நிதியிலிருந்து 133 கோடி ரூபாய் எடுத்துக்கொள்வதென, பிரிட்டிஷ் பொக்கிஷ மந்திரி, முடிவு செய்திருப்பதையும் வன்மையாக அவர் கண்டித்திருக்கிறார். ஏனெனில், மேற்படி நிதியில் பெரும்பாலான காசுகள் பிரிட்டிஷ் தொழிலாளர்களுடையதாகும்! ஆகவே, மக்கள் நலனுக்காகப்பயன் படுத்தப்படவேண்டிய பணத்தைப் போர்த்தளவாடங்களுக்காக எடுத்துச் செலவிடுவது 'கன்னம்' வைப்பதுபோன்ற கள்ளத்தனம் என்று கண்டித்துள்ளார். அதேநேரத்தில்,

"நிறையப் பணம் செலவழித்து, குறைந்த தளவாடங்களைச் செய்வதைக் காட்டிலும், மக்கள் மனநிலையை நல்ல நிலையில் வைத்து அவர்தம் ஒத்துழைப்பைப் பெறுவதே பெரிய பலம்''

என்று, அவர் எடுத்துக் காட்டியிருப்பது, கவனத்திற்குரிய ஒன்றாகும்.

பெவான், பதவியிலிருந்து விலகியது, அதற்குக் காட்டிய காரணம், ஆகியவை குறித்து கருத்து வேற்றுமை கொள்வோர் இருக்கலாம்.

ஆனால், மக்களுக்குத் தன் சர்க்கார் துரோகம் பண்ணுவதாக மனதில் பட்டதும், அதை வாய்விட்டுச் சொல்லி, அதற்குத் தானும் உடந்தையாய் இருக்கமுடியாதெனக் கூறி, பதவியைச் துச்சமென மதித்து, வெளியேறிய அவரது சேவா உணர்ச்சியைப் பாராட்டாமலிருக்க முடியாது.

அந்த மூவரும்—பாராட்டுக்குரியவர்கள்.

மூவரும் ஒரே கட்சியினர்தான்—ஒரே கட்சி, என்பதற்காக அதன் போக்கைக் கண்டிக்கத் தவறவில்லை. அவர்களை, நமது 'பதவி பிம்பங்களுக்கு' காட்ட விரும்புகிறோம்.

பெவான் — குற்றஞ் சாட்டியது போலவே, சமுதாய நன்மைக்கான வழிவகைகளில் செலவிடப் பணம் 'இல்லை! இல்லை!!' என்று கூறும் 'சுயராஜ்ய சர்க்கார்' பாதுகாப்பு என்ற பெயரால் செலவழிக்கும் தொகை, அம்மம்ம எவ்வளவு! நாட்டின் வருமானத்தில், சரி பாதி!

இருந்தும், இதுபற்றி யார் கேட்டனர்? அவ்வளவு செலவு நாம் ஏன் செய்யவேண்டும் என்று சாதாரண உறுப்பினர்கூட இங்கே, 'வாய்' திறந்ததில்லை!

இங்கே, இப்படி!

அங்கே, எப்படி!

இவர்களையும் அவர்களையும் ஒப்பிடவே வெட்கமாயிருக்கிறது. அவர்கள் பதவியைச் துச்சமெனத் தள்ளினர்! இவர்களோ 'எதிர்த்துப் பேசுவதோ மறுத்துப் பேசுவதோ எங்கே நம் பதவிக்கு ஆபத்தைத் தந்துவிடுமோ' என்று, ஒட்டிக் கொண்டிருக்கின்றனர்.

அங்கே, சேவா உணர்ச்சி.

இங்கே, பதவி மோகம்!

அவர்களையும் இவர்களையும் எண்ணினால்! சே, சே! வெட்கம்! வெட்கம்!!

"ஐயோ!"

பருவப் பெண்கள் இருவர், பால் மணம் மாறாச் சிறுவன் ஒருவன், ஆறு இளங்காளைகள் செத்து வீழ்ந்தனர்!

'ஐயோ!' என்ற சப்தம், அழுகுரல், பேரொலி, ரத்தம், பிணம்—கூச்-பீகார் நகரம், கொந்தளித்துக் கிடந்தது, கடந்த 22-ந் தேதி.

பத்திரிகைச் செய்திகளைக் கண்ட போது பதறிற்று உள்ளம். சர்க்காரின் துப்பாக்கிகள், சுதந்திர இந்தியப் பிரஜைகளாம் ஒன்பது உயிர்களை, சாவுலகிற்குச் சேர்ப்பித்தன!

சுட்டது போலீசல்ல; மக்கள் மீது துருப்புகள் சுட்டனராம்! எதிரிகள் மீது பாயவேண்டிய குண்டுகள் இந்நாட்டவரையே சுட்டு வீழ்த்தினவாம்!!

துருப்புகள் அழைக்க வேண்டிய அளவு, மக்களின் ஆவேசம் கொண்டுவந்து விட்டதாம்—காங்கிரஸ் சர்க்காரின் அறிக்கை கூறுகிறது.

"நத்தைகள் கிடைக்குமா?'' என்று குளத்தங் கரைகளிலும், வாய்க்கால் மேட்டிலும், கூட்டங் கூட்டமாய் கிடக்கின்றனர் மக்கள். 'கிழங்கு கிடைக்குமோ?' என, வெளிப்புறத்திலும், தோட்டம் துறவுகளிலும் திரிந்து கொண்டுள்ளனர், பல்லாயிரக் கணக்கில்.''

இவை — பீகாரிலிருந்து வந்து கொண்டிருக்கும் தகவல்கள்.

நத்தை! நண்டு! கிழங்கு! புல் பூண்டு! — இவைகளாவது புசிக்கக் கிடைக்குமோ என்று போராடும் மக்கள் மீதுதான், துப்பாக்கி விளையாடியிருக்கிறது.

பசித்தோர், கொடுமை தாளாது சர்க்கார் அதிகாரிகள் வீடு நோக்கிச் சென்று 'உணவு, தா!' என்று கேட்டனராம். குரல் கொஞ்சமாக எழும்பி, பிறகு பேரொலியாகி 'கொள்ளை! உணவு கண்டால் கொள்ளை!!' என்ற நிலை பிறந்ததாம்.

பட்டினிக் கொடுமை தாளாத அப்பாமரர் கூட்டம், தன் பசி போக்கிக்கொள்ள என்ன வழியுண்டோ, அதையெல்லாம் கையாளத் துவங்கியதாம்.

அது கண்டு சர்க்கார் சுட்டதாம்! துருப்புகளை ஏவிச் சுட்டதாம்! திடுத்து, பருவப் பெண்களும் பாலகனும், வீழ்வது கண்டும் சுட்டதாம்!

அவர்கள் கேட்டது உணவு! காங்கிரசாட்சி தந்ததோ, சாவு!!

பொன்னி

பாரதிதாசன் மணிவிழா மலர்

29—4—51 அன்று வெளிவருகிறது.

புரட்சிக்கவிஞரின் மூவண்ணப்படம் மலரை அலங்கரிக்கிறது.

கட்டுரைகள் — கருத்துரைகள்

கதைகள் — கவிதைகள்

(A) விலை அணா 8

சமூக சீர்திருத்த

★ மாநாடு ★

திண்டிவனம்

மே மாதம் 20-ந் தேதி

தி. தி. மு. க.

சேலம் மாநாடு

★

பிரம்மாண்டமான அளவில் போடப்பட்டுவரும் பந்தல் வேலைகள் முடியும் தறுவாயில் உள்ளன.

அம்மா பேட்டை மெயின் ரோடிலுள்ள திரு P. B. சின்னசாமி அவர்களின் நிலத்தில், அழகுற பந்தல் அமைக்கப்பட்டிருக்கிறது.

மறைந்த மாவீரர் தியாகச் சின்னம் தியாகராயர் அவர்களின் பெயர், பந்தலுக்கு இடப்பட்டிருக்கிறது.

பந்தலின் முகப்பை அலங்கரிக்க அந்த வெள்ளுடை வேந்தரின் அழகுருவம், சென்னையில் பிரபல ஓவிய வல்லுனரால் தயாராகிக் கொண்டிருக்கிறது.

சேலம் மாநாடு, கண்ணையும் கருத்தையும் கவரும். நமது, இயக்க வாழ்வின், வெற்றிச் சின்னமாக விளங்கும். ஏராளமான வெளியூர்ப் பிரதிநிதிகளை எதிர்பார்க்கிறோம்.

"சேலம்"—நமது கழக வரலாற்றில், முக்கிய இடம் பெற்ற நகரம். எனவே, வெளியூர்ப் பிரதிநிதிகளுக்கு தங்குவதற்கும் உணவுக்கும் நல்ல வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. உணவுக்கு விருதுநகர் சமயற்காரர்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

கீழ்க்கண்ட விதமாக, கட்டணங்கள் முடிவு செய்யப்பட்டிருக்கின்றன.

வர. வே. குழு ரூ 5
பிரதிநிதி ரூ 3
பார்வையாளர் ரூ 2
பெண் பார்வையாளர் ரூ 2
உணவுக் கட்டணம் ரூ 2—8—0
(இரு நாட்களுக்கும்)

நாடகம் உள்பட, மாநாட்டின் நிகழ்ச்சிகள் முழுவதற்கும் இந்தக் கட்டணம்.

பார்வையாளர்கள் ஒவ்வொரு நாளைக்கும் தனித்தனியாகவும் டிக்கட் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு நாளைக்கும் ஆண் பார்வையாளர் ரூ 1. பெண் பார்வையாளர் ரூ 0—8—0.

ஜி. பி. சோமசுந்தரம்
வ. கு. த.

★ கடனாளி ★

இந்தியா, 76 கோடி ரூபாய் கடன் பட்டிருக்கிறது.

சர்வ தேச நாணயச் செலாவணி நிதியிலிருந்து 47.4 கோடியும்,

சர்வ தேச பாங்கியிலிருந்து 28.5 கோடியும், ஆகமொத்தம் 76 கோடி, கடன் வாங்கப்பட்டிருக்கிறது.

கடன் வாங்கிய இரு, நிதியும் பாங்கியும், அமெரிக்க வல்லரசின் கைப்பாவைகளாகும்.

இந்தக் கடன், ரயில்வேக்களுக்காகவும் நீர்பாசனத்துக்காகவும் மின்சாரத் 'திட்டங்களுக்காகவும் வாங்கப்பட்டதாகும் என்று இந்திய நிதி அமைச்சர் சிந்தாமன் தேஷ்முக், டில்லி சட்ட சபையில் ஏப்ரல் 18ந் தேதி விளக்கம் தந்திருக்கிறார்.

வாங்கப்பட்டிருக்கும் மேற்படி தொகைக்கு வட்டியுண்டு.

இந்த "நற்செயல்" பிரிட்டிஷாரை வெளியேற்றிவிட்டு 'சுயராஜ்யம்' பெற்ற சூரர்களுடைய ஆட்சியில் ஏற்பட்டதாகும்.

இந்தியா கடன் பட்டிருக்கிறதென்றால் இந்திய மக்கள் 'அடகு' வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றே, பொருளாகும்.

ரயில் அபிவிருத்திக்கென கடன் வாங்கியிருக்கிறார்கள்; ஆனால், நாமும் அதிக கட்டணம் கொடுக்குமாறு நிர்பந்தப்படுத்தப்படுகிறோம்.

நீர்ப்பாசனம், நன்கு இல்லை; நிலமும் வளமும் குறைந்தே கிடக்கிறது—ஆனால் அதன் பெயரால் கடன் மட்டும் வாங்கப்பட்டிருக்கிறது.

மின்சார அபிவிருத்திக்கென, காரணம் காட்டி 'பணம்' வாங்கியிருக்கின்றனர். ஆனால் இருப்பதும் சரியாகக் கிடைப்பதில்லை, நமக்கு.

மார்வாடியிடம், மனைவியின் நகையை அடகு வைக்கச் செல்லும் 'மைனர்', அங்கே காரணம் சொல்வது எப்படியிருக்குமோ அதைப் போல இருக்கிறது, முப்பத்தைந்து கோடி மக்களின் மானத்தையும் வாழ்வையும் செப்பனிட வேண்டிய, சர்க்காரின் போக்கு.

மைனர், தன் 'திருவிளையாடல்களுக்காக', மனைவியின் நகையை அடகு வைத்து கடன் பெறுவான்.

சர்க்கார், தன் 'தண்டச் செலவுகளுக்காக', நாட்டின் மானத்தை ஈடு காட்டி, கடன் பெறுகிறது.

வெள்ளையன் இல்லாத காலத்தில் ஏற்படாத கடன், இப்போது உண்டாகிறது. வெட்கமான காட்சி! துக்கமான சம்பவம்!!

தோழர் நெடுஞ்செழியன்
'மன்றம் அச்சக' நிதி
கோவையில்
★ சந்திரமோகன் ★
சி. என். ஏ., கே. ஆர். ராமசாமி,
பல நடிகமணிகளும் கலந்துகொள்வர்.
13—5—51 ஞாயிறு இரவு
கட்டணம்:- ரூ. 10, 5, 3, 2.
பெண்கள் ரூ. 1

எச்சரிக்கை

"நல்லெண்ணம் கொள்ளாதே,
நயவஞ்சக உலகிது போல்லாதே!
பாம்புக்குப் பால் தரும் செயலாம்,
'ஐயோ, பாபம்' என்று நீ சொல்வ
தேல்லாம்!"

* * *

இந்த எச்சரிக்கை, மிக மிகத் தேவையாகிவிட்டது "நமக்கு." நமக்கு என்றால், தேன் தந்தும் தேளைப் பரிசாகப் பெற்று, உழைத்தும் 'ஒரு நல்' வார்த்தை கிடைக்காது, உருக்குலைந்தாலும் 'ஏன்' என்று கேட்க நாதியற்று, நலிந்து மெலியும், திராவிட சமுதாயத்துக்கு. குன்றெடுக்கும் நெடுந்தோள், கூர்வாளுக் கஞ்சாக் குணம், குருதி கொட்டக் கூசா மன உறுதி, மாற்றான் முன் மண்டியிடா வீரம், பயமறியாச் சிங்கம், பாட்டாளித் தங்கம் என்று பரணி பல பாடப்பெற்ற, சமுதாயம் இன்று சருகு போன்றதாகிவிட்டது!

'ஐயோ! வாழ்ந்த பரம்பரையே, உன் வாளும் வேலும், வாழ்வும் இன்பமும் மங்கிப் போனதே' என்று ஏக்கத்துடன் கேட்போருக்கு, உலர்ந்த சருகு! தேய்ந்த நிலவு! இருண்ட வீடு! ஆகியவைகள்தான், பதிலாக வந்து நிற்கின்றன. பரிதாபம் — பரணி பாடி வாழ்ந்தோர், தரணி திருத்தியோர், இத்தகு இழிநிலைக்கு வந்துவிட்டனர்.

உலக வரலாறு அறிந்தோர், உயர்வு தாழ்வு பேதம் உண்டாகிய விதத்திற்கும், ஏழை பணக்காரன் எப்படி ஏற்பட்டான் என்பதற்கும் பற்பல, காரணங்கள் கூறுவர். காட்டிலும் மேட்டிலும், மலையிலும் குகையிலும், ஒரு காலத்தில் திரிந்த மனித வர்க்கத்திலே, மாறுபாடுகளும், ஏற்றத் தாழ்வுகளும் எவ்விதம் முளைத்தன, எப்படி ஆண்டான்—அடிமை பேதம் ஏற்பட்டது, அது வளர்ந்ததன் வகை என்ன, வளர்த்தோர் யார், அவர்கள் இந்தப் பேதங்களை அவ்வளவு அக்கறையோடு வளர்க்கக் காரணம் என்ன, என்றெல்லாம் சிந்தித்தால், ஒரே ஒரு பதில்தான் கிடைக்கும், புரட்சிக் கவிஞர் கூறுவது போல,

"ஏமாந்த காலத்தில் ஏற்றங்
கொண்டோன்
புலிவேஷம் போடுகின்றான்..."

ஏமாந்த காலம் எது, ஏற்றங் கொண்டோன் யார், புலி வேஷம் போடுகின்றானா என்று, நமது தாயகம் பற்றி, யோசிக்க, பற்பல வரலாற்று அறிஞர்கள் நமக்கு வற்றாத நூல்கள் பல தந்து போயிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்டோர் புலி வேஷம் போடவேண்டி, வகுத்துக் கொண்ட முறைகளும் பிரிவுகளும், 'ஏமாந்தோர் கதை'யை எடுத்துச் சொல்லுபவையாக இருக்கின்றன.

நமது தாயகத்தின் வரலாறு, கண்ணீரைப் பரிசாகப் பெறக்கூடியது.

நமது மக்களின் இறந்தகால வாழ்வு, இதயங்களைச் சுட்டெரிக்கக்கூடியது. இப்போதைய வாழ்வு, எண்ணங்களை எரிமலையாக்குவது.

இடுப்பொடியப் பாடுபடுபவன்!
மூட்டை சுமப்பவன்!
கல் உடைப்போன்!
கழுதை வளர்ப்போன்!
காளையும் மாடும் மேய்ப்பவன்!
களை திருத்தி கழனி காப்போன்!
உடை வெளுப்போன்!
ஆடை தருவோன்!
சாணி தெளிப்பவள்!
வீடு கூட்டுபவள்!
வேலைக்காரி! கூலிக்காரன்!

என்று, கையையும் காலையும் நம்பி, உழைத்தால் வாழ்வு, இன்றேல் சாவு, என்று கிடக்கும் கூட்டத்தைக் கண்டால், அது எது என்று நினைத்தால், போதும் — வேதனை விளங்கும்.

அதே நேரத்தில், கையில் கோயில் மணியும், குரலில் கெம்பீரமும், குடி இருக்கத் தனியிடமும், கோமளக் குரலுடன் படிதாண்டா வாழ்வும், பட்டாடையும், படாடோபமும் எங்கு இருக்கிறது, யார் அவர்கள், எப்படி அங்குமட்டும் அந்நிலை, என்று எண்ணினால் — ஆத்திரம் பிறக்கும், அசடு என்று அழைக்கப்படுபவனுக்குக்கூட.

கடந்த இரண்டாண்டுகளுக்கு முன், இதைக் காங்கிரஸ் முகாமைச் சேர்ந்த கன்னியப்பன் என்ற ஒரு எம். எல். ஏ. தோழர், ஒருபொதுக் கூட்டத்திலே சொன்னார்.

"பார்ப்பனப் பெண்கள், நடவு நட வரட்டுமே! அவர்கள் கணவன்மார், கூலி வேலை செய்யத் துவங்கட்டுமே!" என்று.

இந்தக் கூற்று, கேட்போருக்கு உள்ளக் கிளர்ச்சியை உண்டுபண்ணக்கூடியதே. எனினும், இதில் கிடக்கும் உண்மைகளைச் சாதாரணமானவைகள் என்று எவரும் கூற முடியாது; இதையேதான், திராவிடர் கழகப் பெரியாரும் அடிக்கடி கூறுவார், "ஒரு பார்ப்பனராவது ரிக்ஷா இழுப்பதுண்டா? யாராவது அவர்களில் ஒருவர் வண்டி ஓட்டுவதுண்டா! வீட்டுக்கு வேலைசெய்யும் பெண்ணாக, சாணம் எடுப்பவளாக, ஒரு பார்ப்பனப் பெண்ணையாவது காட்ட முடியுமா?" என்று. இந்தக் கேள்விகள், கொஞ்சம் காரமாகத் தோன்றும், 'காரம்' குறையாத காதலிகளும், 'பெருகு' அழுங்காத போகமேனிகளும் பெற்றிருக்கு.

ஆனால், இந்த நிலை; இந்த நாட்டில் ஏற்பட்டது எவ்விதம்?

வருணாச்சிரம தர்மம்
இந்து மதப் பிரிவுகள்

இவை தவிர்த்து, வேறெதையும் காரணமாகக் காட்ட முடியாது.

நன்றி

என் மகன் செல்வம் இயற்கையெய்தியதை அறிந்து எனக்கு பலவூர்களிலிருந்தும் தந்தி, தபால் மூலம் அனுதாபம் தெரிவித்துக் கொண்ட தோழர்களுக்கும் கழகங்களுக்கும் என் நன்றிகலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக எழுதாததற்கு மன்னிக்கும் படி கேட்டுக் கொள்கிறேன்

தங்கள்
கா. கு. நீலமேகம்

இந்த முறைகள் எப்போது ஏற்பட்டன, யாரால் தோற்றுவிக்கப்பட்டன, எதற்காக, என்று யோசிக்கும் போதுதான் "ஏமாந்த காலத்தில் ஏற்றங்கொண்டோன்" ஞாபகம் வரும்.

இந்த நாட்டினுடைய துரதிர்ஷ்டமே, மதத்தின் பேரால் ஜாதிகளை உண்டாக்கி, இன்னின்ன தொழில்களைச் செய்யவேண்டும், 'வண்ணான்--வெளுக்கத்தான் வேண்டும், நாவிதனா — முடிதிருத்துவதே அவர்தம் கடமை, இடையனா—மாடும் காடுமே அவன் வாழ்வு, புரோகிதனா — புல்லும் புராணமுமே அவன் நிலை, என்பதாக வரையறுத்து, வரம்புகளை உண்டாக்கியதுதான்.

இந்தப் பாகுபாடுகளை உற்று நோக்கின், உழைக்கும் பரம்பரை எது, உழைத்தே வாழவேண்டிய பாகுபாட்டில் வைக்கப்பட்டிருக்கும் ஜாதிகள் எவை, ஆனால் உழைக்காது உயிர் வாழும் நிலை பெற்ற ஜாதி எது, என்பது தெளிவாகப் புரியும்.

உழைப்பவன் பரம்பரை, மிக மிகப் பெரியது. அவன் பரம்பரை ஒருபோது 'ஒன்றேகுலம் ஒருவனே தேவன்' என்று வாழ்ந்த இனம். அந்த இனத்திலேதான், உழைப்பவன் தொகை அதிகம்.

யாரோ சிலர், மிராசுகளாக, வளம் பெற்றோராக இருக்கலாம் அவன் இனத்திலும். உயர்ந்த ஜாதி என்ற பெயருடன், உல்லாசம் பெற்றோராகவும் இருக்கலாம்—ஆனால், இது பாலைவனத்தில் மழைத்துளிகள் போன்றவை.

ஆகவே, உழைத்தே வாழ்வோன் இனம் மிகப் பெரியது. ஆனால், அவன் ஏழை! கல்வி பெற முடியாதவன்!! அவன் தொகை, சமுதாயத்தில் அதிகம் ஆயினும், அவனுக்கு விடிமோட்சம் கிடையாது. வேதனையைப் பெறுகிறான் விடிந்து விளக்கணையும் வரையில்!

பெய்யும் மழை, கொளுத்தும் வெயில், அடிக்கும் காற்று எதுவும் அவனைத் தடுக்கமுடியாது. ஏனெனில் அவைகளுக்காகத் தனது அன்றாடவேலையை விட்டால் அவன் வீட்டில் வேதனை கீதமாகக்கேட்கும்! மனைவியின் சோகத்துக்கு முன், இம்மாக் கொடுமைகள் – எம்மாத்திரம்!

எனவே, அவன் தன் உடலைத் தேய்க்கிறான்--வாழ்வதற்காக.

ஆனால், அவனது வாழ்வோ, ஒரு பாலை—

அந்தப் பாலைவனத்திலே பால்மாரி போல, 'ஏன்?' 'இது ஏன்?' என்ற கேள்வி – அரும்பியது, பல்லாண்டுகளுக்கு முன். வாழப் பிறந்தும் வாழாது மடியும் "மிகப் பலரின்" துயர் தீர்க்கத் துந்துபி முழங்கிற்று! திராவிட இயக்கம் முகிழ்த்தது! "நீதி, நீதி" என்று முழக்கமிட்டு, 'அழியட்டும் அநீதி' 'ஒழியட்டும் ஒரு குலத்துக்கொரு நீதி' என்று சங்கநாதம் அதிர்ந்தது. இன்று அந்தச் சங்கின் முழக்கம் பேருரு எடுத்திருக்கிறது.

இந்த, இடைக்காலத்தில் உரிமைக் கோரிக்கை உருப்பெற, தாண்டவேண்டியிருந்த மேடு பள்ளங்கள் பற்பலவாகும். 'ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்டோர்', உரிமைக்கோரிக்கையின் ஒவ்வொரு படியிலும் காட்டிய எதிர்ப்பின் வகைகள் விதவிதமானவை!

"மதாசாரம், ஜாதியாசாரம், பிரமன் படைப்பு! இதைக்கூடக் குற்றம் சொல்கிறான்களே, நாஸ்திகன்க......" முதலில், அருவருப்பு.

"பார்ப்பனரல்லாத இயக்கமாம்! நீதிக் கட்சியாம்–சுயமரியாதையாம்! பேரைப் பார்த்தயளோ—கலிபோற போக்கு. காலிகள் பெருகிட்டா!" இப்படி, ஏளனம்.

"என்னென்னமோ உளறான்க! தேசத்துரோகப் பசங்க— எதோ, எதோ, கலாட்டா செய்யறதே இதுக தொழிலாப் போச்சு. இதுகளை யார் மதிப்பா. சுயமரியாதையாம், சுயமரியாதை!" பிறகு, கேலி.

"கத்தட்டுமே. நாம் ஏன் கவலைப்படணும். எல்லாம் கொஞ்சநாளைக்கு—குரல் வத்தற வரைக்கும் தான். கத்திட்டுப் போகட்டும் — சும்மா இருங்கோன்னா!" — இது போல, அலட்சியம்.

"திராவிடனாம் ஆரியனாம்! என்னென்ன பேசறாங்க. இவன்களை வளர விடறது, ரொம்ப ஆபத்து. அனுபாசமாப் பேசறாங்க—எழுதறாங்க. இதை விட்டுண்டு இருக்கிறதே, சர்க்கார்!"—இந்த விதமாக ஆர்ப்பரிப்பு.

"எதை யெடுத்தாலும் நம்மை எதிர்க்கிறதே வேலையாயிடுச்சு! நாம்ப சுரண்டறோமாம். சுகமா வாழ்றோமாம். சொல்றாங்க! அதுக்கு சர்க்கார்லே இருக்கிறவாளும் சும்மா இருக்கின்றாக. பார்க்கலாம், ஒரு கை" இதுபோல, இப்போது ஆத்திரம்.

பார்ப்பனரல்லாதோரின் குரல் ஒலிக்கத் துவங்கியது முதல் இன்று வரை, 'ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்டோர்' தங்கள் நிலைகளை அமைத்துக்கொண்டு வந்திருக்கும் முறைகள் இவை.

முதலில் அருவருப்பு காட்டினர்—நாம் ஆத்திரம் அடைந்தோம். சூறாவளி போல இருந்தது சுயமரியாதை இயக்கம்!

ஏளனம் செய்தனர் — 'ஏடா தம்பி, எடடா!' என்ற முரசொலி, கோபம், ஓரே வெறுப்பு வளர்ந்தது, நம்மிடம்.

கேலி பேசினர்—நாம், வளர்ந்து கொண்டிருப்பது கண்டதும். இப்போது, நமது முரசின், அளவும் முறையும் மாறியது. முன்னைவிட, நம் சக்தி வளரவே, கேலியைப் பொருட்படுத்தவில்லை.

பிறகு, அலட்சியம் காட்டினர்—அதனால் அழிந்து போவோம் என்று பத்திரிகைகள் யாவும் நம்

தஞ்சை மாவட்டத் தோழர்களுக்கு

தஞ்சை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாடு வரவேற்பு செயற்குழு கூட்டம் தோழர் K. K. நீலமேகம் தலைமையில் 21—4—51ல் நடைபெற்றது. குழுஉறுப்பினர்கள் பலர் வராததாலும் டிக்கட்டு பெற்றுக் கொண்ட தோழர்கள் சிலரிடமிருந்து பணம் வந்து சேராததாலும் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. தேதி பின்னர் அறிவிக்கப்படும். டிக்கட்டு பெற்றுக்கொண்ட தோழர்கள் தாங்கள் கொடுக்க வேண்டிய தொகைகளை கண்டிப்பாக 30—4—51க்குள் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

V. பராங்குசம்.
R. பழனிச்சாமி.
செயலாளர்கள்

மைப் புறக்கணித்தன — தூற்றின. துவளவில்லை நாம். புதுத் துணிவு பெற்ருேம்.

ஆர்ப்பரிக்கத் துவங்கினர்—நாம் மாபெரும் சக்தியாக வளர்ந்தது கண்டதும்.

இப்போது, ஆத்திரத்தோடு நம்மை நேரிடையாகவும், மறைமுகமாகவும் நமது குரலை நெரிக்கப் புறப்பட்டிருக்கின்றனர் — நமது எண்ணங்கள் தேசியக் கூடாரத்திலும் எதிரொலித்து, அங்குள்ளோரும் 'ஏன்?' 'இது ஏன்?' என்று கேட்கத் துவங்கியது கண்டதும்.

நேருக்கு நேர்!—இந்த நிலைபெற்றுள்ளனர் 'அவர்கள்' அதற்கேற்ற வகையில், பத்திரிகைப் பலமும், கேந்திர ஸ்தானங்களில் தங்களவர் இருக்கின்றனர் என்ற துணிவும், அவர்களுக்குத் துணைசெய்கின்றன.

அத்துணை கொண்டு, மிகப் பெரும்பாலான மக்களின் உரிமைக் கிளர்ச்சியை, ஒடுக்க நினைக்கின்றனர், 'ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்டோர்!'

அவர்களது எதிர்ப்பு ஆர்ப்பரிப்பைக் காணும்போது, நமக்குப் பரிதாபமே உருவாகிற்று. 'ஐயோ, பாவம்!' என்று கூறுமளவில், அனுதாபம் கூட ஏற்பட்டது.

அதை• கடந்த ஆண்டு சென்னை திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில் நாம் வெளியிட்டோம். 'வீண் மமதை வேண்டாம். விளக்கம் பெறுங்கள். காலம் மாறுகிறது—உங்கள் கருத்துக்களையும் மாற்றிக் கொள்ளுங்கள்' என்று அன்பழைப்பு விடுத்தோம். 'விரோதமில்லை எங்களுக்கு. வெறுப்பையும் துவேஷத்தையும் கொண்டே வாழ் நாட்களை வீணுக்கும் விசித்திரப் பிறவிகளுமல்ல.' என்று கூறினேம்.

நாட்டின் உண்மை நிலையுணர்ந்து, எல்லோரும் நம்மைப்போல் வாழவேண்டுமென்று பரந்த மனேபாவம் கொண்டு உழைக்க வாருங்கள் என்று அழைத்து இந்நாட்டு பார்ப்பனகுலத்தலைவர்கள் "சிந்தனைக்கு!" தலையங்கம், ஒன்றும், நமது ஏட்டில் எழுதினேம்.

இந்த அளவு பரந்த மனப்பான்மையை, நாம் காட்டினேம். மனித சுபாவம் இருக்கும் காரணத்தால். புலிக் குணம் மாறும் என எதிர்பார்த்தோம்—இது நமது நல்லெண்ணத்தின் அறிகுறி.

ஏமாற்றும் எண்ணம் மறையும் என நம்பினேம்—இது நம், ஆசையைக் காட்டிற்று.

இந்தி நல்லெண்ணத் தூதுக்குழுவினர் தி. மு.க. பொதுச் செயலாளரைச்சந்தித்துப் பேசியபோதுகூட, நம்முடைய ஆசையை எடுத்துச் சொன்னர்.

இருந்தும், "அவர்கள்" மத்தியில் பழைமை எண்ணம் மாறவில்லை. மாருக, எந்தெந்தவகையில் முயன்ருல் தமது முந்திய நிலை பாதிக்கப் படாமலிருக்குமோ, அதற்கானவழி வகைகளைக்காணத் தவியாய்த் தவிக்கின்றனர், சட்டம், பட்டம், ஆகியவைகளின் துணைகொண்டு.

ஆனல் அதேநேரத்தில் நாட்டில் மலர்ந்துள்ள புதுச் சூழ்நிலையைக் கவனிக்கத் தவறுகின்றனர்.

பார்ப்பனரல்லாத பாட்டாளி மக்களின் வாழ்வு உயரவேண்டுமென, பத்து, இருபது ஆண்டுகளுக்குமுன் கிளம்பிய குரல், ஒரு சாரார்ால் எழும்பியது உண்மை.

ஆனல், இன்று அந்தக் குரல் தேசீயக்கூடாரம், மந்திரிசபை வட்டாரம் எங்கும் எதிரொலிக்கிறது.

காரணம், அங்கெல்லாம் உள்ளோர், இன்று நமது தாயகத்தில் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகளின் மேடு பள்ளங்களை உணர்ந்துகொண்டுவிட்டனர்.

கடந்த வாரம் கம்யூனல் ஜீ. ஓ. பற்றி மேல்சபையில் பேசும்போது,

"பரம்பரை பரம்பரையாக இருந்துவரும் முறையால் ஒரு சிலர், தங்களைச் சமுதாயத் துறையில் முற்போக்குள்ளவர்களாக ஆக்கிக் கொண்டிருக்கின்றனர். இந்த ஏற்றத் தாழ்வுக்கோர், முடிவு காணவேண்டாமா?"

என்று கேட்டிருக்கிருர், கல்வி அமைச்சர் மாதவமேனன்.

இந்தப் புது நிலையை, மனதில் சிந்திக்காது போர்க்கோலம் பூணுகின்றனர், 'அந்த வட்டாரத்து' தலைவர்கள்.

அதற்குப் பல்லவி பாடுகின்றன, அவர்தம் இதழ்கள். அதுமட்டுமல்ல, 'இந்து' போன்ற ஏடுகள், ஏற்றத் தாழ்வுநீங்கவேண்டுமென்ற வகுப்பு நீதிமுறை அழிவதற்கான, முயற்சிகள் என்னென்ன உண்டோ அத்தனையும் செய்து வருகிறது.

நம்மிடம் நல்லெண்ணம்—அங்கே துவேஷம். உழைத்தும் ஏமாறும் சமுதாயம் அன்பு காட்டுகிறது — ஆனல், ஆத்திரம் பரிசாகத் தரப்படுகிறது.

நாம் பேதமற்றசமுதாயம்விரும்புகிருேம் — அங்கிருந்து பித்தலாட்டம் பதிலாக வருகிறது.

இதைக் காணும்போது தான், நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்ற "எச்சரிக்கை" தேவைப்படுகிறது.

எச்சரிக்கை — அவர்களுக்கல்ல; நமக்கு.

எச்சரிக்கை இல்லாததால்தான், நாம் ஏமாந்தோம் — ஏற்றங்கொண்டனர், அவர்கள்.

நமது வாழ்வு தேய்ந்துபோகாமலிருக்க, சாய்ந்து சீர்குலையாமல் தடுக்க எச்சரிக்கை, தேவை—மிக, மிகத் தேவை.

அதைப்பெற, இப்போது உதயமாகியுள்ள புதுச்சூழ்நிலை, பயன்படவேண்டும். கட்சி மாச்சரியமற்ற இந்த உரிமைக் குரல் அப்போது தான் 'ஏமாந்தகாலத்தில் ஏற்றங் கொண்டோரால்', ஒடியாது; வளையாது.

கோவை மாவட்ட தி. மு. கழக செயற்குழு கூட்ட அழைப்பு

29—4—51 ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு கோவை நகர கழக கட்டடத்தில் கோவை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக செயற்குழு கூட்டம் நடைபெறும். ஷை கூட்டத்தில் மாநில மாநாட்டுக்கு கோவை மாவட்டத்தின் சார்பாக 2000 ரூபாய் வசூலித்து கொடுக்க வேண்டியது பற்றியும் இதர முக்கிய விஷயங்களையும் முடிவு செய்ய வேண்டியிருப்பதால்மாவட்டக்குழு உறுப்பினர்களும் கிளைக்கழக செயலாளர்களும் தவருமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

தங்களன்புள்ள
சே. அ. ராசமாணிக்கம்
செயலாளன்

சேலம் நோக்கி திரண்டு வாரீர்!

மே 5, 6

சனி, ஞாயிறு

நாட்களில்

சேலம் மாவட்ட

திராவிட முன்னேற்றக் கழக

★ முதல் மாநாடு ★

அம்மா
பேட்டை
மெயின்
ரோடு
(பி. பி. சின்னச்
சாமி தோட்டம்)
தியாகராயர்
பந்தலில்

T. N. Parangusam
News Agent
Kulitalai

தலைவர்:
நாகர்கோயில்
வி. எம். ஜான்

துவக்குபவர்:
சென்னை
சத்தியவாணிமுத்து

சேலம்

★

கைத்தறியாளர்
துயர் நீக்க,
சம நீதி உரிமை
முரசு கொட்ட,
எழுந்தோம்!

★

நம் இதயகீதம் எழுப்ப
இலட்சிய
வெற்றியைக் காட்ட
விழித்தோம்!

பொதுச்செயலாளர் சி. என். ஏ. வும் எல்லா கழக முன்னணி வீரர்களும் கலந்துகொள்வர்.

சி. என். ஏ.
கே. ஆர்.
ராமசாமி
பங்கு கொள்ளும்
கலை விருந்து.

★ சந்திரமோகன் ★

(சரித்திரச் சித்திரம்)

சனி
இரவு

*

★ நீதிதேவன் மயக்கம் ★

(காவிய ஓவியம்)

ஞாயிறு
இரவு.

விடுதலை முரசு கொட்ட வாரீர்!

விணர் கோட்டம் அடக்கவாரீர்!!

திட்டம் தீட்டிட திரள் திரளாய் வாரீர்!!!

Edited Printed & Published by C. N. Annadurai M. A at DravidaNadu" Press
95. Tirukkachinambi Street Kancheepuram'